**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.161/2019**
**PW13**

| | | |
|---|---|---|
| **Name** | : | பன்னீர்செல்வம் |
| **Father's Name** | : | மலையபிள்ளை |
| **Village** | : | |
| **Taluk/District** | : | சேலம் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.01.2026.
A1 to 3 present.

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2023 ல் பணிநிறைவு பெற்று தற்போது சேலத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2017 ஆம் ஆண்டு நான் வெறையூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். 18.06.2017 அன்று நான் நிலைய பணியில் இருந்தபோது பொரிக்கல் கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணி என்பவர் என்னிடம் கொடுத்த புகார் மனுவை பெற்று அந்நிலைய குற்ற எ்ண். 229/2017 சட்டப்பிரிவுகள் 294(b),323,324,506(2) இதசப்படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் மற்ற நகல்களையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்ப தயார் செய்தேன். அன்று இரவு ரோந்து பணி முடிந்தபிறகு காயமுற்ற ராஜம்மாள் இறந்துவிட்டதாக அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் வந்ததால் வழக்கு கோப்பை மேல் நடவடிக்கைக்காக ஆய்வாளர் பார்வைக்க வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.16. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையை யார் நீதிமன்றத்திற்கு அனுப்பினார்கள் என்று எனக்கு தெரியாது. இறந்த செய்தியை யார் பெற்றார்கள் என்று எனக்கு தெரியாது. திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒரு புறக்காவல் நிலையம்உள்ளது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு வரும் சட்டம் சம்மந்தப்பட்ட வழக்குகளை புறக்காவல் நிலையம்மூலம் சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்படும் என்றால் சரிதான். 18.06.2017

அன்று இரவு 8.00 மணிக்கு நான் பணிக்கு வந்தேன். அதன் பதிவு பொது நாட்குறிப்பில் உள்ளது. நான் பராமரித்த பாக்கெட் நோட்டிலும் அதைப்பற்றி எழுதியுள்ளேன். 18.06.2017 அன்று யார் என்னிடம் காவல் நிலைய பொறுப்பை ஒப்படைத்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மருத்துவமனையில் சட்டம் சார்ந்த வழக்குகள் தொடர்பாக புறக்காவல் நிலையத்தில் இருந்து வரும் தகவல்களை பதிவேட்டில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். ராஜம்மாள் மற்றும் சத்தியராஜ் சம்மந்தமாக வந்த தகவலையும் அந்த பதிவேட்டில் பதிவு செய்திருப்போம் என்றால் ஞாபகம் இல்லை. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை புலன் விசாரணை செய்யும் அதிகாரம் எனக்கு உள்ளது என்றால்சரிதான். வெறையூர் காவல் நிலையத்தில் உள்ள அனைவருக்கும் இருசக்கர வாகனம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் இருசக்கர வாகனம்வைத்திருந்தேன். தொடர்ந்து வெறையூரிலிருந்து திருவண்ணாமலை வர தொடர்ந்து பேருந்து உள்ளது. திருவண்ணாமலை நகரத்திலேயே நீதிமன்ற குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். பேருந்து நிலையத்தில் இருந்து 5 கி.மீ தொலைவில் நீதிமன்றம் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் 18.06.2017 அன்று இரவு ரோந்து பணிக்கு செல்லவே இல்லை என்றும், அவ்வாறு பணிக்கு சென்றதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 19.06.2017 அன்று தலைமைக்காவலர் மணி என்பவர் மதியம் 3.40 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்னவிதத்திலும் புகார் பெறப்படவில்லை என்றும் முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ராஜம்மாள் இறப்பிற்கு பிறகு வழக்கிற்கு ஏற்றவாறு முதல் தகவல் அறிக்கையும் புகாரையும் என் மேல் அதிகாரிகளின் ஆலோசனைப்படி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கு தகுந்தவாறு பதிவு செய்யப்பட்ட புகாரை தவறாக 18.06.2017 அன்று இரவு 8.00 மணிக்கு பதிவு செய்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் புகார் கொடுத்த சுப்பிரமணி தன் தாயும் , மகனும் மயக்க நிலையில் உள்ளதால் 18.06.2017 அன்று வெறையூர் காவல் நிலையம் சென்று நடவடிக்கைக்காக புகார் கொடுக்கிறேன் என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.